மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி,

**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

காரியாபட்டி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 1 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.9/2026**

IN

**அசல் வழக்கு எண். 3/2025**

1. கந்தசாமி (**இறப்பு**)
2. பூமிநாதன்
3. வள்ளி
4. முத்துலட்சுமி
5. முத்துசெல்வம்
6. அழகர்சாமி
7. ஆறுமுகம். **... மனுதாரர்கள்/வாதிகள்**

**/எதிர்/**

1. அழகுமயில் (**இறப்பு**) **.....1 ம் பிரதிவாதி**
2. மகாலிங்கம் **.....2 ம் பிரதிவாதி**
3. சீனிவெள்ளை (**இறப்பு**) **.....3 ம் பிரதிவாதி**
4. கண்ணன்
5. ராக்கு
6. முத்துராக்கு
7. இருளாயி
8. அழகு
9. ராமர்
10. குருவள்ளி
11. ராக்கு
12. முத்துச்செல்வி
13. கார்த்திகைச்செல்வி
14. கச்சம்மாள்
15. முத்தமிழ்செல்வி
16. முத்துமுருகன். **..... 4 முதல் 16 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/ 4 முதல் 16 வரையுள்ள பிரதிவாதிகள்.**

இம்மனுவானது 09.01.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 24.04.2026 வந்தபோது, மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தெறிராஜன் அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 5,7 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜர்இல்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், 4, 8, 10 முதல் 16 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கார்க்கிசெல்வம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பினரும் செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 32 ரூல் 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் 5,6 வாதிகள் மேஜர் வயதடைந்துவிட்டதால் அவர்களின் அடுத்த சிநேகிதர் ஸ்தானத்தில் இருந்து அவர்களின் தாயாரான 3ம்வாதி வழக்கு நடத்தி வந்ததில், மேற்படி மேஜரான 5,6 வாதிகளின் அடுத்த சிநேகிதர் என்ற ஸ்தானத்தில் இருந்து வருவதனை நீக்கரவு செய்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல்.

**2.மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது 5,6 வாதிகள் மைனர்களாக இருந்ததால் அவர்களது தாயார் கார்டியனாக இருந்து வழக்கை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் 5ம்வாதி கடந்த 30.7.2001ம் தேதியன்று பிறந்து தற்போது 24 வயதும், 6ம் வாதி கடந்த 23.6.2005ம் தேதியன்று பிறந்து தற்போது 20 வயதும் ஆகிவிட்ட நிலையில், மேற்படி இருவரும் மேஜர் வயதடைந்துவிட்டதால் அடுத்த சிநேகிதர் ஸ்தானத்தில் இருந்து 3ம்வாதியை நீக்கரவு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. உரிய காலத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யாமல் போன தவறானது வேண்டுமென்ற ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமானதாகும். இம்மனுவை அனுமதிக்காவிடில் அது மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படகூடும். இம்மனுவை அனுமதிப்பதால் அது எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை. எனவே, அசல் வழக்கில் 5,6 வாதிகளை மேஜர் வயதடைந்துவிட்டதால் அவர்களின் அடுத்த சிநேகிதர் ஸ்தானத்தில் இருந்து அவர்களின் தாயாரான 3ம்வாதியை நீக்கரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 16ம் எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:-**

16ம் எதிர்மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் 5,6 வாதிகள் மேஜர் வயதடைந்துவிட்டார்கள் என்பதை உரிய ஆவணங்கள் மூலம் மனுதாரர்கள் நிருபணம் செய்ய கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேலும் 5,6 வாதிகள் உரிய வயதை அடைந்து 6 மற்றும் 2 வருடங்கள் கழித்து மனுதாரர்கள் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, மனுதாரர்களின் மனுவானது இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. தீர்வு காணவேண்டிய பிரச்சனை:-**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**5. தீர்வு முடிவு:–**

5(1).இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது 5,6 வாதிகள் மைனர்களாக இருந்ததால் அவர்களது தாயார் கார்டியனாக இருந்து வழக்கை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் 5ம்வாதி கடந்த 30.7.2001ம் தேதியன்று பிறந்து தற்போது 24 வயதும், 6ம் வாதி கடந்த 23.6.2005ம் தேதியன்று பிறந்து தற்போது 20 வயதும் ஆகிவிட்ட நிலையில், மேற்படி இருவரும் மேஜர் வயதடைந்துவிட்டதால் அவர்களின் அடுத்த சிநேகிதர் ஸ்தானத்தில் இருந்து அவர்களின் தாயாரான 3ம்வாதியை நீக்கரவு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

5(3). 16 எதிர்மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் 5,6 வாதிகள் மேஜர் வயதடைந்துவிட்டார்கள் என்பதை உரிய ஆவணங்கள் மூலம் மனுதாரர்கள் நிருபணம் செய்ய கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேலும் 5,6 வாதிகள் உரிய வயதை அடைந்து 6 மற்றும் 2 வருடங்கள் கழித்து மனுதாரர்கள் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

5(4). மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் 5,6 மைனர் வாதிகளை மேஜராகிவிட்டதால் அவர்களின் அடுத்த சிநேகிதர் ஸ்தானத்தில் இருந்து அவர்களின் தாயாரான 3ம்வாதியை நீக்கரவு செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அதனை பொறுத்து பார்க்கையில், இந்த அசல் வழக்கில் இம்மனுவுடன் இணைந்து தாக்கல் செய்துள்ள 5,6 வாதிகளை மேஜராக அங்கீகரித்து கொள்ள வேண்டுமென்ற மனுவான இ.ம.எண். 8/26 அனுமதிக்கப்பட்டுள்ள போது, அதனுடன் தொடர்பு கொண்டு இம்மனுவும் அனுமதிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றே

இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க மனுதாரர்கள் தரப்பு ஆதாரங்களை முன்னிறுத்த மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித அநீதி ஏதும் விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இந்தமனுவினை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>6. இறுதிமுடிவு:-</u>

**இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை குறித்து உத்தரவு இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 01 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**
இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி,
IA.No. 09/2026
in
O.S.No. 3/2025
உத்தரவு
நாள். 1.06.2026